Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 178 | உள்ளூர் - 27.06.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 178 | வெளியூர் - 28.06.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**ஜூலையில் இந்த 6 ராசிகளுக்கு பண மழை!**

**தமிழ்நாடு தேசிய சுகாதார இயக்கம் 27 காலியிடங்கள்!**

**இயக்குனர் பாக்யராஜ் காலமானார்!**

**வெனிசுலாவில் மீளாத துயரம்...!**

## ஐதராபாத்தில் உள்ள சாலைக்கு டொனால்டு டிரம்ப் பெயர்!

வாஷிங்டன், ஜூன். 27–

தெலுங்கானாவில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. அம்மாநில முதல்–மந்திரியாக ரேவந்த் ரெட்டி செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, அம்மாநிலத்தின் ஐதராபாத்தில் மைக்ரோசாப்ட், கூகுள், அமேசான் போன்ற அமெரிக்க நிறுவனங்கள் அமைந்துள்ள சாலைக்கு டொனால்டு டிரம்ப் சாலை என்று தெலுங்கானா அரசு பெயர் வைத்துள்ளது. இது தொடர்பான நிகழ்ச்சியும் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியொ கொர் பங்கேற்றார். இந்தியாவின் தெலுங்கா னாவில் உள்ள சாலைக்கு தனது பெயர் வைத்ததற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ட்ரூத் சமூகவலைதளத்தில் டிரம்ப் வெளியிட்ட பதிவில், இந்தியாவின் ஐதராபாத்தில் உள்ள சாலைக்கு டொனால்டு டிரம்ப் சாலை என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த பெருமையை பெறும் முதல் அமெரிக்கா ஜனாதிபதியாக நான் திகிழ்கிறேன். ஐதராபாத் சாலைக்கு எனது பெயர் வைத்ததற்கு நன்றி' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அரசு முறை பயணமாக செஷல்ஸ் புறப்பட்டார் பிரதமர் மோடி!

புதுடெல்லி, ஜூன். 27–

இந்திய கடற்படையின் 2 கப்பல்கள் மற்றும் பாதுகாப்பு படைப் பிரிவினர் இந்த தேசிய தின கொண்டாட்டங்களில் பங்கேற்கின்றனர். இந்த பயணத்தின் போது செஷல்ஸ் அதிபர் பேட்ரிக்குடன் பிரதமர் மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.



மேலும், செஷல்ஸ் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் பிரதமர் மோடி அங்குள்ள இந்திய வம்சாவளியினரிடம் கலந்துரையாடுகிறார். வரலாறு, கலாசாரம், மக்கள் ரீதியிலான தொடர்புகளில் இந்தியா மற்றும் செஷல்ஸ் நீண்டகால கூட்டுறவு கொண்டுள்ளன.

பிரதமரின் தற்போதைய பயணம், இருதரப்பு வலுவான, நீடித்த உறவை மீண்டும் உறுதி செய்வதுடன், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த உதவும் என்று மத்திய வெளியுறவு அமைச்சரகம் தெரிவித்துள்ளது. பிரதமர் மோடி ஏற்கனவே 2015–ஆம் ஆண்டு செஷல்ஸ் நாட்டுக்கு சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்திய மந்திரிசபை மாற்றம்: புதிய நிதி மந்திரியாகிறார் சக்திகாந்த தாஸ்?

புதுடெல்லி, ஜூன். 27–

மத்திய மந்திரிசபை ஓரிரு நாளில் மாற்றப்பட இருப்பதாகவும், நிர்மலா சீதாராமனுக்கு பதில் சக்திகாந்த தாஸ் புதிய நிதி மந்திரியாக நியமிக்கப்பட இருப்பதாகவும் தகவல்கள் பரவி வருகின்றன.





**மந்திரிசபை மாற்றம் செய்யப்படுகிறதா..?**

மத்தியில் பா.ஜனதா அரசு 3–வது முறையாக பதவியேற்று 2 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில், மத்திய மந்திரிசபையை மாற்றி அமைக்க பிரதமர் மோடி முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**ஜனாதிபதி திரவுபதி முர்மு**

இதன் அறிகுறியாக, மத்திய இணை மந்திரிகள் பங்கஜ் சவுத்ரி, ஹர்ஷ மல்கோத்ரா ஆகியோர் கட்சிப்பணிக்கு அனுப்பப்பட்டனர். ஜார்ஜ் குரியனும் தனது பதவியை ராஜினாமா செய்தார். இந்த சூழலில், பிரதமர் மோடி மற்றும் உள்துறை மந்திரி அமித்ஷா ஆகியோர் அடுத்தடுத்து ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்தித்து பேசியது மந்திரிசபை மாற்றத்திற்கான யூகங்களை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இன்னும் ஓரிரு நாட்களில் இந்த மாற்றம் நடக்கும் என கூறப்படுகிறது. இதனால், எந்தெந்த துறைகளில் மாற்றம் வரும், புதிய மந்திரிகள் யார்.. நீக்கப்படுபவர்கள் யார் என்பன பற்றிய பேச்சுகளும் வெளிவரத் தொடங்கி விட்டன.

**சக்திகாந்த தாஸ்**

இந்தவகையில் டெல்லியில் நேற்று பரபரப்பாக பேசப்பட்டது நிதித்துறை. தற்போது நிதித்துறை மந்திரியாக நிர்மலா சீதாராமன் இருக்கிறார். இவருக்கு பதிலாக பிரதமரின் முதன்மை செயலாளரும், ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னருமான சக்திகாந்த தாஸ் நிதி மந்திரியாக நியமிக்கப்படலாம் என கூறப்படுகிறது. நிர்மலா சீதாராமன், மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு நியமிக்கப்படலாம் அல்லது அவர் கட்சிப்பணிக்கு அனுப்பப்படலாம் என சொல்லப்படுகிறது. இதுபோல மந்திரி மனோகர்லாலுக்கு துறைகள் மாற்றப்படும் என தெரிகிறது.

மேலும் பெட்ரோலியத்துறை மந்திரி ஹர்தீப்சிங் பூரி நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக பஞ்சாப் மாநிலத்தில் இருந்து குறைந்தது 2 பேரை மந்திரிகளாக்க முடிவு செய்யப்பட்டு இருப்பதாக சொல்கிறார்கள். குறிப்பாக அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்கள் மந்திரிசபை மாற்றத்தில் சிறப்பாக கவனிக்கப்படும் என தெரிகிறது.

கல்வி மந்திரி தர்மேந்திர பிரதானும் நீக்கப்படலாம் என பேச்சுகள் வருகின்றன. வினாத்தாள் கசிவு விவகாரங்களில் இவர் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கிறார்.

**ஸ்ரீகாந்த் ஷிண்டே**

மந்திரிசபையில் புதிதாக நுழைபவர்களில் மராட்டிய மாநிலத்தின் ஸ்ரீகாந்த் ஷிண்டே (சிவசேனா). ஆம் ஆத்மியில் இருந்து விலகிய ராகவ்சதா, அதுபோல திரிணாமுல் காங்கிரசில் இருந்து விலகிய சில எம்.பி.க்களின் பெயர்களும் அடிபடுகின்றன. பீகார் முன்னாள் முதல்–மந்திரி நிதிஷ்குமாரும் மந்திரி சபையில் சேர்க்கப்படலாம் என பேசப்படுகிறது. இதுபோல அனுராக் தாக்கூரும் மீண்டும் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது.

மாற்றத்தின் ஒரு பகுதியாக தற்போதைய 6 இணை மந்திரிகளுக்கு பதவி பறிப்பு இருக்கும் என வட்டாரங்கள் தெரிவித்தன. இதில் தென்மாநில மந்திரிகள் அதிகம் இருப்பார்கள் என கூறப்படுகிறது.

தற்போது ஏ.ஐ. தொழில்நுட்பம் வளர்ந்திருப்பதால் அந்த துறையில் திறன்மிக்க ஒருவர் மந்திரிசபையில் புதிதாக நுழைவார் எனவும் சொல்லப்படுகிறது. மந்திரிசபையை வலுப்படுத்துவது போல கட்சியை வலுப்படுத்துவதிலும் அக்கறை காட்டப்படுகிறது. இதில் பெண்களுக்கும் அதிக வாய்ப்புகள் வழங்கப்பட இருப்பதாக தெரிகிறது.

# பதிலுக்கு பதில் தாக்குதல்..!

# ஹார்முஸ் நீரிணையில் குண்டு மழை..!

## அமெரிக்கா – ஈரான் போர் மீண்டும் தீவிரமா..?

புதுடெல்லி, ஜூன்.27–

மத்திய கிழக்கில் மீண்டும் போர் வெடித்துள்ளது, அமெரிக்காவும் ஈரானும் நேரடியாக பதிலடி தாக்குதல்களில் ஈடுபட்டு உள்ளனர். ஈரான் நேற்று ஹார்முஸ் வழித்தடத்தில் ஓமானிய எல்லை வழியாக சென்ற ஒரு சிங்கப்பூர் கப்பல் மீது தாக்குதல் நடத்திய நிலையில், அமெரிக்கா பதில் தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரானும் பதில் தாக்குதல் நடத்தி ஷாக் கொடுத்துள்ளது. உலகின் மிக முக்கியமான கச்சா எண்ணெய் போக்குவரத்து பாதையாகக் கருதப்படும் ஹார்முஸ் நீரிணை பகுதியில் நடைபெற்ற இந்த மோதல், உலகளாவிய எண்ணெய் சந்தை மற்றும் சர்வதேச கப்பல் போக்குவரத்தில் மீண்டும் புதிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




அமெரிக்காவின் பதிலடி அமெரிக்க ராணுவத்தின் மத்திய கட்டளை அமைப்பான சென்ட்காம் வெளியிட்ட தகவலின்படி, நேற்று சிங்கப்பூர் கொடியுடன் வந்த சரக்கு கப்பல் மீது ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்திய சம்பவத்துக்குப் பதிலடியாக அமெரிக்கா ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என தெரிவித்துள்ளது.

ஈரானின் தெற்குப் பகுதியில் உள்ள சிரிக் துறைமுகத்தைச் சுற்றியுள்ள ஏவுகணை மற்றும் ட்ரோன் சேமிப்பு மையங்கள், கடலோர ரேடார் நிலையங்கள் ஆகியவற்றை அமெரிக்க போர் விமானங்கள் குறிவைத்து தாக்கியதாக சென்ட்காம் தெரிவித்துள்ளது. ஹார்முஸ் நீரிணை வழியாக நடைபெறும் சர்வதேச வர்த்தகத்தின் பாதுகாப்பை பாதிக்கும் வகையில் ஈரான் செயல்பட்டு வருவதாகவும், அதற்கு வலுவான பதிலடி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது. ஹார்முஸ் நீரிணை அருகே தொடர் தாக்குதல் அமெரிக்க தாக்குதல் அறிவிப்புக்குப் பிறகு, தெற்கு ஈரானின் சிரிக் பகுதி மற்றும் ஹார்முஸ் நீரிணை அருகே தொடர்ச்சியாக மூன்று வெடிக்குண்டு சத்தங்கள் கேட்டதாக அந்நாட்டு அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதற்கு முன்பாக, ஹார்முஸ் நீரிணையில் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு அமெரிக்கா என்ன நடவடிக்கை எடுக்கும் என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் “அதை விரைவில் தெரிந்துகொள்வீர்கள்” என்று பதிலளித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இந்த ராணுவ நடவடிக்கை நடைபெற்றது. அமெரிக்க தளங்களை குறிவைத்ததாக ஈரான் அறிவிப்பு அமெரிக்க தாக்குதலுக்கு சில மணி நேரங்களிலேயே ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (IRGC) பதிலடி தாக்குதல் நடத்தியதாக அறிவித்துள்ளது. அரசு செய்தி நிறுவனமான IRNA வெளியிட்ட தகவலின்படி, வளைகுடா பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க ராணுவத்தின் முக்கிய நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக IRGC தெரிவித்துள்ளது. எந்த இடங்கள் குறிவைக்கப்பட்டன, சேதம் எவ்வளவு என்பது குறுத்து அதிகாரப்பூர்வ விவரங்கள் வெளியாகவில்லை. மேலும், “மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டால், இதைவிட விரிவான மற்றும் கடுமையான பதிலடி வழங்கப்படும்” என்றும் ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஹார்முஸ் நீரிணை முழுவதும் எங்களுக்கே – ஈரான் ஈரான் புரட்சிகர காவல் படை வெளியிட்ட மற்றொரு அறிக்கையில், இஸ்லாமாபாத் ஒப்பந்தத்தின் 5–வது பிரிவின்படி ஹார்முஸ் நீரிணையில் போக்குவரத்து மற்றும் கப்பல் இயக்கத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் ஈரானுக்கே உள்ளது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்தினால், தனது பதில் நடவடிக்கைகள் தற்போதையதை விட மிகப்பெரியதாக இருக்கும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. ஹார்முஸ் நீரிணை உலகளவில் கடல் வழியாக ஏற்றுமதி செய்யப்படும் கச்சா எண்ணெயில் குறிப்பிடத்தக்க பகுதி ஹார்முஸ் நீரிணை வழியாகவே செல்கிறது. எனவே, இந்தப் பகுதியில் ஏற்படும் சிறிய பாதிப்பும் சர்வதேச எண்ணெய் விலை, கப்பல் காப்பீட்டு செலவு, சரக்கு போக்குவரத்து மற்றும் உலக வர்த்தகத்தில் உடனடி தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

தற்போதைய அமெரிக்கா – ஈரான் மோதல் மேலும் விரிவடையுமா அல்லது தூதரக பேச்சுவார்த்தை மூலம் பதற்றம் குறையுமா என்பது உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வரும் முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது. இந்த மோதல் எந்த திசையில் செல்லும் என்பதை வரும் நாட்களில் பார்க்கலாம்.

## பாக்யராஜின் இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை- முதலமைச்சர் விஜய் அறிவிப்பு!

சென்னை, ஜூன். 27–

தமிழ்த் திரையுலகின் தலைசிறந்த இயக்குநர், நடிகர், திரைக்கதை ஆசிரியர், வசனகர்த்தா, இசையமைப்பாளர் என பன்முகத் திறமையால் முத்திரை பதித்த கே. பாக்யராஜ் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையும் அடைந்தேன்.





தனித்துவமான கதையாக்கம், நகைச்சுவை கலந்த நடிப்பு, கிராமிய வாழ்வியல் மற்றும் குடும்ப உறவுகளின் ஆழமான உணர்வுகளை பிரதிபலிக்கும் திரைப்படங்கள் மூலம் தமிழ் மக்களின் மனதில் நீங்கா இடம்பிடித்த கே. பாக்யராஜ் அவர்களின் பங்களிப்பு தமிழ்த் திரைப்பட உலகிற்கு அளப்பரியதாகும்.

அவரது ஒவ்வொரு படைப்பும் பொழுதுபோக்கோடு, மனிதநேயம் மற்றும் சமூக விழுமியங்களை பேசும் காலத்தால் அழியாத நினைவுகளாக என்றும் நிலைத்திருக்கும். அவரது மறைவு தமிழ்த் திரையுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். கே.பாக்யராஜ் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், திரைத்துறையினருக்கும் மற்றும் ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா இறைவன் திருவடியில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன்.

திரைத்துறையில் கே.பாக்யராஜ் அவர்களின் பங்களிப்பைப் போற்றி, அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## ஜூலை 1 முதல் அமலுக்கு வரும் புதிய கிரெடிட் கார்டு விதிகள்!

புதுடெல்லி, ஜூன். 27–

ஜூலை 1 முதல் இந்திய கிரெடிட் கார்டு பயனர்களுக்கு ஏர்போர்ட் லவுஞ்ச் (Lounge) வசதி பெறுவதில் முக்கிய மாற்றங்கள் அமலுக்கு வந்துள்ளன. இனிமேல், முந்தைய காலாண்டில் நீங்கள் செய்த செலவுகளின் அடிப்படையிலேயே இந்த சலுகை வழங்கப்படும். உதாரணமாக, ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் நீங்கள் போதிய அளவு செலவு செய்யவில்லை என்றால், ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான காலாண்டில் லவுஞ்ச் வசதியைப் பயன்படுத்த முடியாது. கார்டுகளைத் தொ டர்ந்து பயன்படுத்துப வர்களுக்கு மட்டுமே இந்த பிரீமியம் சலுகைகள் கிடைப்பதை உறுதி செய்ய வங்கிகள் இந்த முறையைக் கொண்டு வந்துள்ளன. HDFC மற்றும் ICICI போன்ற முன்னணி வங்கிகள் தங்களது பிரீமியம் கார்டுகளுக்கான தகுதி வரம்புகளை மாற்றியுள்ளன. உதாரணமாக, HDFC ரெகாலியா கோல்ட் (Regalia Gold) மற்றும் டைனர்ஸ் கிளப் பிரிவிலேஜ் (Diners Club Privilege) கார்டுகளைப் பயன்படுத்துவோர், ஒரு காலாண்டில் குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்திருக்க வேண்டும்.




அதிகரித்து வரும் செலவுகளைக் கட்டுப்படுத்தவும், ஆக்டிவ் பயனர்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, ஏர்போர்ட் கிளம்பும் முன்பே உங்கள் கார்டுக்கான தகுதியை ஒருமுறை சரிபார்த்துக் கொள்வது நல்லது.

## தலையங்கம்

மதுரை மணி

சனிக்கிழமை 27.06.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆனி மாதம் 13-ம் தேதி

# 2026-இல் ஆளுக்கு ரூ.1.96 லட்சம் கடனா?




தங்கத்தை நம் நாட்டினர் விரும்பி வாங்குவதற்கான காரணம் அதன் லிக்விடிட்டி. அதாவது எப்போது வேண்டுமானாலும் தங்கத்தை மாற்றி பணம் பெறலாம். ஒன்று அதை விற்பனை செய்யலாம், இல்லையெனில் தங்கத்தை அடகு வைத்து பணம் பெறலாம். இதனாலோ என்னவோ விலை ஏற்றத்திலும் சிறுக சிறுக பணம் சேர்த்து ஒவ்வொரு கிராமமாக தங்கம் வாங்கி சேமித்தனர். இன்றும் அதே தங்கம் தான் நம் நாட்டின் கடன் சந்தையை ஆக்ரமிக்கத் தொடங்கியுள்ளது. சமீபத்தில் எக்ஸ்பீரியன் என்ற நிறுவனம் ஒரு புதிய ஆய்வறிக்கையை வெளியிட்டது.

அதில் இந்தியாவில் நகைக் கடன் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவித்திருக்கிறது. ஒரு காலத்தில் அவசர மருத்துவச் செலவுகளோ அல்லது எதிர்பாராத பண நெருக்கடியோ ஏற்பட்டால் மட்டுமே தங்கத்தை அடகு வைத்தார்கள். ஆனால் இப்போது அந்த நிலை மாறிவிட்டது. தங்களுடைய தொழிலை விரிவுபடுத்துவதற்கு, பிள்ளைகளின் கல்வி செலவுக்கு, அவர்களின் திருமணத்திற்கு என எண்ணற்ற காரணங்களுக்கு தங்கத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

எக்ஸ்பீரியன் அறிக்கையின்படி 2026–ஆம் நிதியாண்டில் மற்ற கடன்களை விட நகைக்கடன் 84 சதவீதம் அதிகரித்ததாக தெரியவந்துள்ளது. அதிலும் 2023–ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் ரூ.6.3 லட்சம் கோடியாக இருந்த மொத்த நகை கடன் மதிப்பு.. 2026–ஆம் ஆண்டில் ரூ.19.4 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிக அளவிலான நகை கடன் பெறப்பட்டுள்ளது.

தொடர்ந்து அதிகரிக்கும் தங்க விலையும் தங்கக் கடன் அதிகரித்ததற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. ஏனெனில் நகையின் தங்கத்தின் மதிப்பு அதிகரிக்கும் போது கடன் பெறுபவர்கள் குறைந்த அளவு தங்கத்தை பிணையமாக வைத்துவிட்டு, அதிக கடனை பெற முடியும். இதுவே தங்கக் கடன் அதிகரித்ததற்கு காரணமானதாக அறிக்கை கூறுகிறது. 2023–ஆம் ஆண்டில் ஒரு நபர் கிட்டத்தட்ட 98,000 ரூபாய் வரையில் தங்க கடன் பெற்றிருப்பதாகத் தெரியவந்தது. ஆனால் 2026–ஆம் ஆண்டில் இந்த தொகை ரூ.1.96 லட்சமாக அதிகரித்துள்ளது. கடன் பெறுபவர்கள் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாக தங்கக் கடன் பெற்றிருக்கின்றனர்.

மக்கள் அதிகம் கடன் பெறுகின்றனர்.. அப்படியானால் அதை சரியாக மீட்கின்றனரா என்ற கேள்வியும் எழுகிறது. ஆனால் அறிக்கையில் மக்கள் நிதி நடத்தை சரியாக இருப்பதாக தெரியவந்துள்ளது. 90 நாட்களுக்கு மேல் தங்கக் கடன் பெற்று அதை நிலுவையில் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை இதற்கு முன்னர் 0.4 சதவீதமாக இருந்தது. ஆனால் தற்போது இந்த விகிதம் 0.2 சதவீதமாக குறைந்துள்ளது.

அதாவது மக்கள் வாங்கிய கடனை முறையாக திருப்பி வருகின்றனர் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. எப்போதும் தென்னிந்திய மக்கள் தங்கத்தை அதிகம் பயன்படுத்தி கடன் பெறுவார்கள். ஆனால் இப்போது வட இந்தியாவிலும் தங்க கடன் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கியுள்ளது. அதிலும் குறிப்பாக உத்தரப்பிரதேசம் முன்னிலை வகிக்கிறது. அதற்கு அடுத்தபடியாக மேற்கு வங்கம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா உள்ளிட்ட பகுதிகளிலும் தங்கம் மூலமாக கடன் பெறும் முறை பரவலாக தொடங்கியுள்ளது. இந்த தங்க கடனால் ஒரு நன்மையும் நடந்திருக்கிறது. பெண்கள் நீண்ட காலமாக தங்கள் வீட்டு லாக்கரில் பூட்டி வைத்திருந்த தங்கத்தை தாங்கள் நடத்தும் சிறு தொழில், விவசாயம் மற்றும் பிற தொழிலுக்காக பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.



திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி பகுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# ஒவ்வொரு துறை குறித்தும் 20 ஸ்லைடு காட்சி; முதல்வருக்கு விளக்க அதிகாரிகளுக்கு உத்தரவு!

சென்னை, ஜூன், 27–

ஆய்வு கூட்டத்தில் பங்கேற்கவுள்ள முதல்வர் விஜய்க்கு விளக்க வசதியாக, துறை வாரியாக தலா, 20 'ஸ்லைடு' புகைப்பட காட்சிகளை தயாரிக்க, துறை செயலர்களுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது. த.வெ.க., அரசின் முதல் பட்ஜெட், அடுத்த மாதம் தாக்கல் செய்யப்பட உள்ளது. பின்னர் துறை வாரியாக மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விவாதம் நடைபெற உள்ளது. இதுதொடர்பாக, துறை வாரியாக ஜூலை 2 முதல், அதிகாரிகளுடன் முதல்வர் விஜய் ஆலோசனை நடத்த உள்ளார். இந்த ஆய்வு கூட்டம், ஜூலை, 22ம் தேதி வரை நடக்கவுள்ளது. அதன்பின், பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்.



இதுதொடர்பாக, தலைமை செயலர் அலுவலகத்தில் இருந்து, துறை செயலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றிக்கை: ஜூலை 2 முதல் 22 வரை, துறை வாரியாக ஆய்வு கூட்டம் நடக்கிறது. ஒவ்வொரு நாளும் காலையில் ஒரு துறை கூட்டமும், மாலையில் ஒரு துறை ஆய்வு கூட்டமும் நடக்கவுள்ளது. முதல் நாளில் கூட்டுறவு, உணவு, வருவாய் துறை ஆய்வு கூட்டம் நடக்கிறது.

இரண்டாவது நாள் ஊரக வளர்ச்சி, நெடுஞ்சாலை துறை ஆய்வு கூட்டம் நடக்கிறது. இந்த ஆய்வு கூட்டங்களில் துறையின் அம்சங்களை உள்ளடக்கி, ஒரு சுருக்கமான விளக்கக் காட்சியை, தொடர்புடைய புகைப்படங்களுடன், 20 'ஸ்லைடு'களுக்கு மிகாமல் தயார் செய்ய வேண்டும்.

அதில், துறை செயல்பாடுகள் குறித்தும், ஓராண்டு, மூன்றாண்டு, ஐந்தாண்டு கால திட்டங்கள் குறித்தும் எ டுத்துரைக்க வேண்டும். வெளிப்படை தன்மை, செயல் திறன் மற்றும் சேவை வழங்குவதை மேம் படுத்துவதற்கான பரிந்துரைகள் இடம்பெற வேண்டும்.

துறை எதிர்கொள்ளும் சவால் குறித்தும், அதில் தெரிவிக்க வேண்டும். நிதி சார்ந்த பரிந்துரைகள் இருந்தால், அது தொடர்பாக நிதித்துறை செயலருடன் விவாதித்து, அதன்படி பரிந்துரை வழங்க வேண்டும்.

இந்த விளக்க காட்சிகளை தலைமை செயலரின் ஒப்புதலை பெற்று, ஆய்வு கூட்டம் நடப்பதற்கு குறைந்தபட்சம் இரண்டு நாட்களுக்கு முன்பாக, முதல்வர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருச்சி கிழக்கில் ஸ்டாலின் போட்டியிட்டால் வைகோவை களமிறக்க தவெக வியூகம்..!

திருச்சி, ஜூன். 27–

திருச்சி கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், தி.மு.க., தலைவர் ஸ்டாலின் போட்டியிட்டால், அவரை எதிர்த்து ம.தி.மு.க., பொதுச்செயலர் வைகோவை களம் இறக்க, தமிழக வெற்றிக் கழகம் வியூகம் அமைத்துள்ளது.

சட்டசபை தேர்தலில், சென்னை பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளில், முதல்வர் விஜய் வெற்றி பெற்றார். அதில், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்ததால், அங்கு இடைத் தேர்தல் நடக்கவுள்ளது.

இந்நிலையில், சட்டசபை தேர்தல் தோல்விக்கு பின், மக்கள் செல்வாக்கை மீண்டும் பெற வேண்டிய கட்டாயத்தில் தி.மு.க., இருக்கிறது.

சட்டசபையில், 'உங்க அப்பாவை காணோம்' என, முதல்வர் விஜய் விமர்சித்த பின், ஒட்டுமொத்த தி.மு.க., தொண்டர்களும், இடைத்தேர்தலில் ஸ்டாலின் போட்டியிட வேண்டும் என, வலியுறுத்தி வருகின்றனர்.



### பலமான வேட்பாளர்

ஏற்கனவே, திருச்சி கிழக்கில் ஸ்டாலின் போட்டியிட வலியுறுத்தி, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க., சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தி.மு.க., முதன்மை செயலர் கே.என்.நேருவும், அதை ஆமோதிக்கும் வகையில், 'சட்டசபைக்கு ஸ்டாலின் வருவார்' என கூறினார்.

அதற்கு ஸ்டாலின் மறுப்பு எதுவும் தெரிவிக்காமல், ''இன்னும் முடிவு செய்யப்படவில்லை,'' என பதிலளித்தார். இதனால், இது குறித்த முடிவை, தி.மு.க., உயர்நிலை செயல் திட்டக்குழு கூட்டத்தில் அறிவிக்க வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது.

அதே நேரத்தில், திருச்சி கிழக்கு தொகுதியில் ஸ்டாலின் போட்டியிட்டால், அவரை தோற்கடிக்க, பலமான வேட்பாளரை நிறுத்த, ஆளுங்கட்சியான த.வெ.க., தரப்பில் ஆலோசிக்கப்பட்டு உள்ளது.

### கடும் நெருக்கடி

தற்போது தி.மு.க., கூட்டணியில் இருக்கும் ம.தி.மு.க.,வின் பொதுக்குழு கூட்டம் இன்று கூடுகிறது. அதில், தி.மு.க., கூட்டணியில் இருந்து விலகி, த.வெ.க., கூட்டணியில் சேரும் முடிவு அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, த.வெ.க., கூட்டணிக்கு ம.தி.மு.க., வந்தால், ஸ்டாலினுக்கு எதிராக ம.தி.மு.க., பொதுச்செயலர் வைகோவை களமிறக்க த.வெ.க., திட்டமிடுகிறது.

ஏற்கனவே, திருச்சி லோக்சபா தொகுதியில், தீப்பெட்டி சின்னத்தில் ம.தி.மு.க., முதன்மை செயலர் துரை வைகோ போட்டியிட்டு வென்று, எம்.பி.,யாக இருக்கிறார். எனவே, அதே சின்னத்தில், திருச்சி கிழக்கு சட்டசபை தொகுதியில், ம.தி.மு.க., பொதுச் செயலர் வைகோ போட்டியிட்டால், ஸ்டாலினுக்கு கடும் நெருக்கடி தர முடியும் என, த.வெ.க., தரப்பு கருதுகிறது.

# அ.தி.மு.க.வில் சி.வி.சண்முகத்துடன் தொடரும் மோதல்!

சென்னை, ஜூன். 27–

அ.தி.மு.க.,வில் ஏற்பட்ட பிளவை சரி செய்யும் முயற்சியில், பொதுச்செயலர் பழனிசாமி இறங்கியுள்ளபோதும், முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகத்துடன் மோதல் தொடருகிறது. அ.தி.மு.க., மூத்த நிர்வாகிகள் கூறியதாவது: அதிருப்தி அணியினர் பழனிசாமியுடன் இணைந்தபோதும், பறித்த பதவிகளை திரும்ப கொடுக்காமல் பழனிசாமி பிடிவாதமாக இருந்தார். இதனால், அதிருப்தியான பலர், கட்சி தாவ தயாராகினர். இதையடுத்து, பழனிசாமிக்கு நெருக்கமான முன்னாள் நீதிபதி, தொழிலதிபர்கள் சிலர், அவரை சந்தித்து பேசினர். அப்போது, 'திரும்பி வந்தவர்களுக்கு பதவி கொடுக்காமல், பழி வாங்குவது நல்லதல்ல. கொங்கு மண்டலத்தில் அ.தி.மு.க., மீள, வேலுமணி, தங்கமணி அவசியம். எல்லாருக்கும் பதவியை கொடுத்து, பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள்' என அறிவுரை கூறி உள்ளனர்.




அதன்படி, பிளவை ஒட்டவைக்கும் முயற்சியாக, விஸ்வநாதன், வேலுமணி ஆகியோருக்கு துணை பொதுச்செயலர் பதவியை கொடுத்துள்ளார். வேலுமணிக்கு, தனக்கு இணையாக து.பொ.செ., பதவி கொடுத்ததை கே.பி. முனுசாமி எதிர்த்துள்ளார். அதை தாண்டி தான் வேலுமணிக்கு பொறுப்பு வழங்கப்பட்டு உள்ளது.

தனக்கு து.பொ.செ., பதவி தரப்படும் என முன்னாள் அமைச்சர் உதயகுமார் எதிர்பார்த்தார். ஆனால், அவரை பழனிசாமி நம்பவில்லை. தங்கமணி மீதான கோபம் இன்னும் குறையாததால், கும்பலோடு கும்பலாக அமைப்பு செயலர் பதவியை பழனிசாமி கொடுத்துள்ளார்.

கட்சி தாவும் முடிவில் இருக்கும் எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு கொள்கை பரப்பு இணை செயலர் பொறுப்பு வழங்கப்பட்டு உள்ளது. ஆனால், சி.வி. சண்முகத்துக்கு இதுவரை எந்த பொறுப்பும் கொடுக்கவில்லை.

ஏனெனில், எம்.எல்.ஏ., பதவியை காப்பாற்ற, பழனிசாமிக்கு ஆதரவாக கடிதம் கொடுத்த சண்முகம், இன்று வரை பழனிசாமியை சந்திக்கவில்லை. மாறாக, பழனிசாமிக்கு எதிராக பேசி வருகிறார்.

இதனால், அவர் மீது கடும் கோபத்தில் பழனிசாமி இருக்கிறார். எனவே தான், அவருக்கு எவ்வித பதவியும் கொடுக்கவில்லை. இனி, தன்னை பற்றி சண்முகம் பேசினால், கட்சியில் இருந்து நீக்கவும் பழனிசாமி திட்டமிட்டுள்ளார். இவ்வாறு அவர்கள் கூறினர்.

### வேலுமணி, தங்கமணி அதிருப்தி

மாவட்டச் செயலர் பதவியை மீண்டும் தராததால், வேலுமணி, தங்கமணி போன்ற அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். கட்சி உத்தரவை மீறி, த.வெ.க., அரசுக்கு ஓட்டளித்த வேலுமணி, சண்முகம் உள்ளிட்ட 25 எம்.எல்.ஏ.,க்களில், ஐந்து பேர் பதவியை ராஜினாமா செய்து, கட்சியை விட்டு சென்று விட்டனர். சண்முகத்தை தவிர மற்றவர்கள், பழனிசாமியை சந்தித்து, அவர் தலைமையில் செயல்படுவதாக தெரிவித்தனர்.

இதையடுத்து, வேலுமணி, தங்கமணி உள்ளிட்டோருக்கு மாநில அளவிலான பொறுப்புகளை பழனி சாமி அறிவித்தார். கட்சியில் பொதுச்செயலர் பதவிக்கு அடுத்து அதிகாரம் மிக்க பதவி என்றால், மாவட்டச் செயலர் தான். துணை பொதுச்செயலர், அமைப்புச் செயலர் போன்றவை அலங்கார பதவிகள். செயற்குழு, பொதுக்குழு போன்றவற்றில் மேடையில் அமரலாம்; வேறு எந்த பலனும் இல்லை.

வேலுமணி, தங்கமணி, காமராஜ் உள்ளிட்டோருக்கு மீண்டும் மாவட்ட செயலர் பதவியை வழங்காமல், அவர்களின் போட்டியாளர்களுக்கு தரப்பட்டுள்ளன. இதனால், அவர்கள் கடும் அதிருப்தி அடைந்திருப்பதால், அ.தி.மு.க.,வில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

# ஸ்டாலினுடன் பிரேமலதா அவசர சந்திப்பு!




சென்னை, ஜூன். 27–

'இனி கூட்டணி இல்லை' என, தி.மு.க., தலைவர் ஸ்டாலின், அறிவித்த நிலையில், ஸ்டாலினை தே.மு.தி.க., பொதுச்செயலர் பிரேமலதா சந்தித்து பேசினார். திருவாரூரில் திருமண விழாவில் ஸ்டாலின் பேசுகையில், ''எந்த கூட்டணி கட்சியாக இருந்தாலும் அவர்களாக சென்றால், நான் ஒன்றும் சொல்ல முடியாது. இன்றைக்கு, தி.மு.க.,வுக்கு கூட்டணியே தேவை இல்லை என, சொல்கின்றனர். அதை பரிசீலிப்போம்,'' என்றார். இதையடுத்து, சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள ஸ்டாலின் இல்லத்தில், அவரை பிரேமலதாவும், தே.மு.தி.க., – எம்.பி., சுதீசும் சந்தித்தனர். காலையில் 'இனி கூட்டணி இல்லை' என அறிவித்த ஸ்டாலினை, மாலையில் அவசரமாக பிரேமலதா சந்தித்துள்ளார்.

தி.மு.க., வட்டாரங்கள் கூறியதாவது: தி.மு.க., கூட்டணியில் இருந்து காங்., உள்ளிட்ட கட்சிகள் வெளியேறிய நிலையில், ம.தி.மு.க.,வும் வெளியேறினாலும், தி.மு.க., கூட்டணியில் நீடிக்கவே தே.மு.தி.க., விரும்புகிறது.

இதை, ஸ்டாலினிடம் பிரேமலதா தெரிவித்துள்ளார். மேலும், சட்டசபையில், 'அப்பாவை காணோம்' என, முதல்வர் விஜய் பேசியது தனக்கு பிடிக்கவில்லை என கூறியுள்ளார்.

த.வெ.க., அரசுக்கு எதிராக, தி.மு.க., முன்னெடுக்கும் அனைத்து போராட்டங்களிலும், தே.மு.தி.க., பங்கேற்கும் என்றும் பிரேமலதா தெரிவித்துள்ளார். இவ்வாறு அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.



# ஜூலையில் இந்த 6 ராசிகளுக்கு பண மழை!




ஜூலை மாதம் முழுவதும் குரு பகவான் கடக ராசியில் உச்ச நிலையில் இருப்பார். அதே சமயம் சனி பகவான் முழுமையான கட்டுப்பாட்டில் இருப்பார். இந்த அமைப்பு சில ராசிக்காரர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், நிதி நிலையை மேம்படுத்தவும், பண மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகளை முழுமையாகத் தீர்க்கவும் வாய்ப்பளிக்கும். செல்வத்திற்கு அதிபதியான குரு சாதகமாக இருப்பதால், வருமானத்தில் படிப்படியான வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. மேஷம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம் மற்றும் மீனம் ஆகிய ராசிக்காரர்களுக்கு வருமானம் அதிகரிப்பதோடு, கூடுதல் வருமானத்திற்கான வாய்ப்புகளும் பெருகும்.

**மேஷம்:** இந்த ராசியின் அதிர்ஷ்டாதிபதியான குரு பகவான் நான்காம் வீட்டில் உச்ச நிலையில் இருப்பதாலும், தனாதிபதியான சுக்கிரன் மிகவும் சாதகமாக இருப்பதாலும், இவ்வினத்தவர் குறைந்த முயற்சியிலேயே அதிக நிதி ஆதாயங்களைப் பெறுவார்கள். சிறிய முயற்சியிலேயே வருமானத்தில் நல்ல உயர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. அடுத்த மாதம் முழுவதும் பங்குச் சந்தை, ஊக வணிகம் (speculation) மற்றும் பிற நிதி பரிவர்த்தனைகள் சிறப்பாக அமையும். திடீர் பண வரவுக்கும் வாய்ப்புள்ளது. நிதி அல்லது தனிப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பில்லை.

**மிதுனம்:** தன ஸ்தானத்தில் (பணத்திற்கான வீட்டில்) பணத்தை ஈட்டித் தரும் கிரகமான குரு உச்சம் பெற்றுள்ளதாலும், ராசி அதிபதியான புதன் அவருடன் இணைந்திருப்பதாலும், இவ்வினத்தவருக்கு ஜூலை 2 முதல் சிறப்பு பண யோகங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. எதிர்பார்ப்புக்கு மேலான நிதி ஆதாயங்கள் கிடைக்கும். தொழில் மற்றும் வேலையில் சம்பளம் மற்றும் படிகளில் எதிர்பாராத உயர்வு ஏற்படலாம். வியாபாரத்தில் லாபம் இரட்டிப்பாகும். வரவேண்டிய பணம் வந்து சேரும். நிதிச் சிக்கல்கள் படிப்படியாகக் குறையும்.

**கன்னி:** இவ்வினத்தவருக்கு குரு பகவான் சுப நிலையில் இருப்பதாலும், ராசி அதிபதியான புதனுடன் இணைந்திருப்பதாலும், பங்குச் சந்தை, ஊக வணிகம் மற்றும் நிதி பரிவர்த்தனைகள் எனப் பல வழிகளில் வருமானம் அதிகரிக்கும். பண ரீதியாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் வெற்றியடையும். நீங்கள் தொடும் காரியங்கள் அனைத்தும் பொன்னாக மாறும். வரவேண்டிய பணத்துடன், நிலுவைத் தொகைகளும் வசூலாகும். நிதி மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகளிலிருந்து நீங்கள் கிட்டத்தட்ட முழுமையாக விடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** இந்த ராசிகளுக்கு தனாதிபதியான குரு பகவான் பாக்கிய ஸ்தானத்தில் (அதிர்ஷ்ட ஸ்தானத்தில்) உச்ச நிலையில் சஞ்சரிப்பதால், நாளுக்கு நாள் வருமானம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. பங்குச் சந்தை, ஊக வணிகம் மற்றும் நிதி பரிவர்த்தனைகள் எதிர்பார்ப்புக்கு மேலான லாபத்தைத் தரும். தொழில் மற்றும் வேலைவாய்ப்புகள் மூலமாக மட்டுமல்லாமல், அரசு சார்ந்த வழிகளிலும் பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. சாதாரண மக்களும் கூட செல்வந்தர்களாக மாறுவார்கள். 'தன யோகங்கள்' தொடர்ந்து இரண்டு முறை அமையும். அவர்கள் நிச்சயமாகத் தங்கள் நிதிச் சிக்கல்களிலிருந்து விடுபடுவார்கள்.

**மகரம்:** இந்த ராசிக்குச் செல்வத்திற்கு அதிபதியான சனி பகவான் மூன்றாம் வீட்டில் உள்ளார்; அதேவேளையில், ஏழாம் வீட்டில் உச்சம் பெற்றுள்ள செல்வத்தை வாரி வழங்கும் குரு பகவானின் பார்வை அவர் மீது விழுகிறது. இதனால் வருமானத்தை உயர்த்த மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளும் நல்ல பலனைத் தரும். புதன் மற்றும் சுக்கிரன் ஆகியோரின் சாதகமான நிலையால் பல்வேறு வழிகளில் அபரிமிதமான பண வரவு ஏற்படும். சம்பளம் மற்றும் படிகள் தவிர, கூடுதல் வருமானம் கிடைப்பதோடு, பங்குகள், ஊக வணிகம் (speculation) மற்றும் சொத்துக்கள் மூலமாகவும் நல்ல லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. சொத்து தொடர்பான பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு, மதிப்புமிக்க சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

**மீனம்:** இந்த ராசியின் செல்வம் மற்றும் அதிர்ஷ்டத்திற்கு அதிபதியான செவ்வாய் பகவான் ஜூலை மாதம் முழுவதும் மூன்றாம் வீட்டில் சஞ்சரிப்பதாலும், ராசிக்கு அதிபதியான குரு பகவான் ஐந்தாம் வீட்டில் உச்சம் பெற்றிருப்பதாலும், இவர்களின் வருமானம் பல மடங்கு அதிகரிக்கும். திடீர் பண வரவுக்கான வாய்ப்பும் உள்ளது. தொழில் மற்றும் வேலைவாய்ப்பில் வருமானம் உயரும். வியாபாரத்தில் எதிர்பார்ப்பை விட அதிகமான பண லாபம் கிடைக்கும். சொத்துக்கள் மூலமாகவும் செல்வம் பெருகும். நிதிச் சிக்கல்களிலிருந்து விடுதலை கிடைக்கும்.




## இப்பவே நிறுத்துங்கள்... சர்க்கரை உயரும்!




தற்போதைய டிஜிட்டல் யுகத்தில், பலர் இரவு வெகுநேரம் வரை அலைபேசியைப் பார்ப்பதையோ அல்லது அலுவலகப் பணிகளால் தாமதமாகத் தூங்குவதையோ வழக்கமாகக் கொண்டுள்ளனர். இருப்பினும், இந்தத் தவறான வாழ்க்கை முறை உங்கள் உடலின் வளர்சிதை மாற்றத்தை (metabo–lism) நேரடியாகப் பாதிக்கிறது என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்..

குறிப்பாக, தாமதமாகத் தூங்குவது உடலில் இன்சுலின் உற்பத்தியை மோசமாகப் பாதித்து, ‘அறிகுறிகள் வெளிப்படாத நீரிழிவு நோய்க்கு’ (silent diabetes) வழிவகுக்கும். இரவு நேரத் தூக்கத்திற்கும் இரத்தச் சர்க்கரை அளவிற்கும் இடையே உள்ள அதிர்ச்சியூட்டும் தொடர்பை இப்போது தெளிவாகப் பார்ப்போம்.

**இன்சுலின் உணர்திறன் குறைதல்**

இரவில் போதுமான அளவு தூங்காதது உடலில் இன்சுலின் உணர்திறனை (insulin sensitivity) கணிசமாகக் குறைக்கிறது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இது இரத்தத்தில் உள்ள குளுக்கோஸை ஆற்றலாக மாற்றும் இயற்கையான வளர்சிதை மாற்றச் செயல்முறையை முழுமையாகச் சீர்குலைக்கிறது. இதன் விளைவாக, உடலில் குளுக்கோஸ் அளவுகள் கட்டுப்பாட்டை மீறி, நீரிழிவு நோய்க்கு வழிவகுக்கிறது.

**துரித உணவுகள் மீதான நாட்டம்**
**உடல் எடை அதிகரிப்பு**

தாமதமாகத் தூங்குவது உடலில் பசியைக் கட்டுப்படுத்தும் ஹார்மோன்களில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகிறது. நள்ளிரவுக்குப் பிறகு, அதிக கலோரி கொண்ட துரித உணவுகள் (junk foods), இனிப்புகள் மற்றும் ஃபாஸ்ட் ஃபுட் வகைகளைச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை (food crav–ings) வெகுவாக அதிகரிக்கிறது. இச்சமயத்தில் அதிக கலோரி கொண்ட உணவுகளை உட்கொள்வது விரைவான உடல் எடை அதிகரிப்பு மற்றும் உடல் பருமனுக்கு வழிவகுக்கும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

**டைப் 2 நீரிழிவு நோயின் அச்சுறுத்தல்**

இன்சுலின் சமநிலையின்மை மற்றும் அதிகரித்த உடல் எடை ஆகியவை இணைந்து, காலப்போக்கில் கடுமையான ‘டைப் 2 நீரிழிவு நோய்’ (type 2 diabetes) வருவதற்கான அபாயத்தை நூறு மடங்கு அதிகரிக்கின்றன என்று மருத்துவர் பி. கிரண்மயி தெளிவுபடுத்துகிறார். இந்தப் பிரச்சனை ஒருமுறை தொடங்கிவிட்டால், வாழ்நாள் முழுவதும் மருந்துகளைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஒருவருக்கு எவ்வளவு தூக்கம் தேவை? உடலில் ஹார்மோன் சமநிலையைப் பேணுவதற்கும், வளர்சிதை மாற்றம் சீராக நடைபெறுவதற்கும் தூக்கம் மிக முக்கியம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பெரியவர்கள் தினமும் குறைந்தது 7 முதல் 9 மணிநேரம் வரை நிம்மதியான, தரமான தூக்கத்தைப் பெறுவது அவசியம். சரியான நேரத்தில் போதுமான அளவு தூங்குவது இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இரத்தச் சர்க்கரை அளவையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்..

# ஆன்லைனில் பணம் இழந்தால் ரூ.25,000 வரை இழப்பீடு!




புதுடெல்லி, ஜூன். 27–

‘டிஜிட்டல் வங்கி பரிவர்த்தனைகள் வாயிலாக, ‘ஆன்லைன்’ மோசடிகளில் சிக்கி, 50,000 ரூபாய் வரை பணத்தை இழப்போர், 25,000 ரூபாய் வரை இழப்பீடு பெற முடியும்’ என, ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இந்த புதிய விதி, அடுத்த ஆண்டு ஜன.,1 முதல் நடைமுறைக்கு வர உள்ளது.

இது குறித்து, ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை

‘ஆன்லைன்’ மோசடியில் சிக்கி, 50,000 ரூபாய்க்குள் பணத்தை இழந்த ஒரு நபர், தன் வாழ்நாளில் ஒரு முறை மட்டும், தான் இழந்த பணத்தில் 85 சதவீதம் அல்லது அதிகபட்சமாக 25,000 ரூபாய் வரை, உடனடி இழப்பீடாகப் பெற முடியும். இந்த இழப்பீட்டுத் தொகையை, ரிசர்வ் வங்கி 65 சதவீதம், வாடிக்கையாளர் சம்பந்தப்பட்ட வங்கி இணைந்தே வழங்கும்.

ஒரு வேளை மோசடி செய்யப்பட்ட தொகையை, போலீசார் அல்லது வங்கி அதிகாரிகள், பிற்காலத்தில் முழுமையாக மீட்டெடுத்தால், அந்த முழுத் தொகையையும், வாடிக்கையாளரே திரும்பப் பெற முடியும். எனினும், 50,000 ரூபாய்க்கும் அதிகமான தொகையை, ‘ஆன்லைன்’ மோசடிகளில் இழப்போருக்கு, இந்த புதிய இழப்பீட்டு விதி பொருந்தாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இடைத்தேர்தலில் அம்பாசமுத்திரம் தொகுதியில் களமிறங்குகிறார் சீமான்!



சென்னை, ஜூன். 27–

அம்பாசமுத்திரம் தொகுதியில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டியிட உள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:–

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் காரைக்குடி தொகுதியில் போட்டியிட்ட நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று நம்பினோம். உங்கள் குரல் சட்டமன்றத்தில் ஒலிக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் தோல்வி அடைந்திருக்க கூடாது என்று பிற கட்சிகளை சேர்ந்தவர்களும் தங்களுடைய ஆதங்கத்தை என்னிடம் வெளிப்படுத்தினார்கள்.

தற்போது காலியாக உள்ள 6 தொகுதிகளில் ஏதேனும் தொகுதிகளில் நான் போட்டியிட வேண்டும் என்பது நாம் தமிழர் கட்சியினரின் விருப்பமாக இருக்கிறது. பிற கட்சிகளை சேர்ந்தவர்களின் விருப்பமும் இதுவாகத்தான் இருக்கிறது.

எனவே இந்த 6 தொகுதிகளில் எந்த தொகுதிகளில் போட்டியிடலாம் என்று ஆலோசித்த போது, அம்பாசமுத்திரம் தொகுதி உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்துள்ளேன். இந்த தொகுதியில் நான் போட்டியிடுவது உறுதி. இடைத்தேர்தல் நடைபெறும் 6 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் களம் இறக்கப்படுவார்கள். எத்தனையோ களத்தை சந்தித்துவிட்டேன். இந்த களத்தையும் சந்திக்க தயாராகிவிட்டேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

நடைபெற உள்ள இடைத்தேர்தலில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் போட்டியிடுவார் என்று எதிர்பார்ப்பு ஒருபுறம் இருக்க, அம்பாசமுத்திரம் தொகுதியில் சீமான் களம் இறங்குவதாக அறிவித்துள்ளார். எனவே தமிழக அரசியல் களம் மீண்டும் சூடுபிடிக்க தொடங்கி உள்ளது.

# கோவில்களில் சிலர் மட்டுமே டெண்டர் எடுப்பதற்கு தடை விதிகளை மாற்ற உத்தரவு!



மதுரை, ஜூன். 27–

‘அறநிலைய துறையின் கீழ் உள்ள கோவில்களில், சிலர் மட்டுமே தொடர்ந்து டெண்டர் எடுப்பதை தவிர்க்க, விதிமுறைகளை திருத்தியமைக்க வேண்டும். பிரசாதம் வழங்கப்படாத கோவில்களில் நிர்வாகமே தயாரித்து பிரசாதம் வழங்க வேண்டும். ஒருகால பூஜை நடக்கும் கோவில்களில், இனி மூன்றுகால பூஜை நடத்த வேண்டும்’ என, அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக அறநிலைய துறையின் கீழ், 44,000 கோவில்கள் உள்ளன. அதிக வருவாய் தரும் கோவில்கள், அடுத்த நிலையில் உள்ள கோவில்களில் பூ, பழம் விற்பனை, காலணி பாதுகாத்தல், பார்க்கிங் போன்றவற்றிக்கு கோவில் நிர்வாகம் டெண்டர் விட்டு வருவாய் ஈட்டுகிறது.

இதில், அரசியல் பின்னணியுடன் சிலர் மட்டுமே காலம்காலமாக டெண்டர் எடுத்து வருகின்றனர். கோவில் நிர்வாகத்தின் ஒப்புதல் இல்லாமல் கட்டணங்களையும் உயர்த்தி வசூலிக்கின்றனர். இதுகுறித்து, அமைச்சர் ரமேஷுக்கு தொடர்ந்து புகார்கள் வந்தன.

அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய அவர், சிலர் மட்டுமே டெண்டர் எடுப்பதை தவிர்க்க, அதற்கான விதிமுறைகளில் சில திருத்தங்களை செய்யும்படி அறிவுறுத்தியுள்ளார். வழக்கமாக, ஜூலை 1 முதல் ஜூன் வரை ஓராண்டுக்கு டெண்டர் விடப்படும். அமைச்சர் உத்தரவால், 2026 – 27ம் ஆண்டிற்கான டெண்டர் விடுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஜூலை முதல் வாரத்தில் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகளுடன் டெண்டர் விடப்பட உள்ளது. இதன் மூலம் தகுதியானவர்கள் அனைவரும் டெண்டரில் பங்கேற்க வாய்ப்பு ஏற்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையே, இனி அனைத்து கோவில்களிலும் பிரசாதம் வழங்க, அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். கோவில் நிர்வாகமே தயாரித்து இதை வழங்க உள்ளது. உதாரணமாக, மீனாட்சி அம்மன் கோவில் நிர்வாகத்தின் கீழ் உள்ள உபகோவில்களில், மீனாட்சி கோவிலில் தயாரிக்கப்படும் பிரசாதங்கள் இனி கிடைக்கும். அதுபோல், ஒருவேளை மட்டுமே பூஜை நடக்கும் கோவில்களை கண்டறிந்து, இனி மூன்று வேளையும் பூஜை நடக்க ஏற்பாடு செய்யுமாறு, அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# கொல்கத்தா கட்டிட விபத்து - பலி எண்ணிக்கை 16 ஆக உயர்வு!



கொல்கத்தா, ஜூன். 27–

கொல்கத்தாவில் ஏற்பட்ட கட்டிட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

மேற்கு வங்காள மாநிலம் கொல்கத்தாவின் தாரதலா பகுதியில் சியாமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்திற்கு சொந்தமான பகுதியில் சேமிப்பு கிடங்கு கட்டும் பணிகள் நடைபெற்று வந்தன.

**விபத்து**

அதன்படி, கடந்த புதன்கிழமை சேமிப்பு கிடங்கு கட்டுமான பணியில் தொழிலாளர்கள் 30க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டு வந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக கட்டிடத்தின் மேற்கூரை இடிந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் தொழிலாளர்கள் அனைவரும் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர்.

**பலி எண்ணிக்கை**

இந்த விபத்து குறித்து தகவலறிந்த போலீசார், மீட்புக்குழுவினர் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இதில் 17 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். ஆனால் இந்தவிபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது. விபத்தில் ஏற்கனவே 15 பேர் உயிரிழந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் இன்று உயிரிழந்தார். இதனால் கொல்கத்தா கட்டிட விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது. அதேவேளை, கட்டிட விபத்து நடந்த பகுதியில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# வெனிசூலாவில் மீளாத துயரம்...!



வெனிசுலா, ஜூன். 27–

பயங்கர நிலநடுக்கங்களால் 920 பேர் உயிரிழந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு, வெனிசுலாவை மீண்டும் 4.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் உலுக்கியுள்ளது.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில், கடந்த 24ம் தேதி இரு சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் அடுத்தடுத்து ஏற்பட்டன. தலைநகர் கராகசுக்கு மேற்கே, மொரோன் கடற்கரை பகுதிக்கு அருகே, 39 வினாடிகள் இடைவெளியில் இந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

முதல் நிலநடுக்கம் 7.2 ரிக்டர் அளவும், இரண்டாவது நிலநடுக்கம் 7.5 ரிக்டர் அளவும் பதிவானது. இதில், கராகஸ் மற்றும் லா குவைரா பகுதிகள் அதிகளவு சேதமடைந்து உள்ளன. நகரின் முக்கிய கட்டடங்கள், அடையாளங்கள் சரிந்து விழுந்து இடி பாடுகளின் குவியல்களாய் காட்சியளிக்கின்றன.

சம்பவ இடங்களில் இரவு, பகலாக மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதுவரை 920 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 3,360 காயமடைந்துள்ளனர். தற்போது வெனிசுலாவின் வடக்குக் கடற்கரைக்கு அருகே 4.9 ரிக்டர் அளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது, ஏற்கனவே ஒரு பெரும் பேரழிவால் தத்தளிக்கும் அப்பகுதிக்கு மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மராகே நகருக்கு வடமேற்கே 61 கிலோமீட்டர் தொலைவில் நிலநடுக்கம் நிகழ்ந்துள்ளது. மராகே மற்றும் அதன் தலைநகரான கராகஸ் ஆகிய இரு இடங்களிலும் நில அதிர்வுகள் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதம் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

# திமுக கூட்டணியிலிருந்து மதிமுக விலகல்..!



சென்னை, ஜூன். 27–

சென்னை அண்ணாநகரில் ம.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டத்தில் செந்தில் செல்வன் மட்டுமல்லாது, ராஜேந்திரனும் கலந்து கொள்ளவில்லை. 2 பேருமே கலந்து கொள்ளாதது கட்சியின் பொதுச் செயலாளர் வைகோவை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

இதுகுறித்து, ம.தி.மு.க. தரப்பினரிடம் விசாரித்தபோது, பரபரப்பு தகவல்கள் வெளியாகின. அதாவது, தி.மு.க. கூட்டணியை முறித்துக்கொ ண்டு த.வெ.க.வுக்கு ம.தி.மு.க. ஆதரவு தர ம.தி.மு.க. முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால், அக்கட்சி எம்.எல்.ஏ.க்கள் 2 பேரும் தங்களுடைய பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

**இடைத்தேர்தலில் துரை வைகோ போட்டியா..?**

இதை ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜேந்திரன், செந்தில் செல்வன் ஆகியோர் விரும்பவில்லையாம். த.வெ.க.வில் இணைந்தாலும், இடைத்தேர்தலில் மீண்டும் இவர்கள் 2 பேருக்கும் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதே நேரத்தில், கட்சியின் முதன்மை செயலாளரும், திருச்சி தொகுதி எம்.பி.யுமான துரை வைகோவை இடைத்தேர்தலில் போட்டியிட வைக்க வாய்ப்பு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின. அவர் வெற்றி பெற்றால், த.வெ.க. அமைச்சரவையில் அவருக்கு இடம் வழங்கப்படும் என்று கூறப்படுகிறது. ஆனால், பொதுக்குழு கூட்டத்தில் அவரும் பங்கேற்கவில்லை.

இதுபோன்ற, நகர்வுகளுக்கு மத்தியிலேயே ம.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் இன்று கூடியது. அதில் தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகுவதாக பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேறியது. தேர்தல் கூட்டணி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என கூறப்படுள்ளது.

# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு தேசிய சுகாதார இயக்கம் (TN NHM) 27 காலிப்பணியிடங்கள்!

தமிழ்நாடு தேசிய சுகாதார இயக்கம் (National Health Mission TN NHM) சார்பில் 2026–ஆம் ஆண்டிற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின் மூலம் Chief Advisor, Advisor, Consultant, Intern உள்ளிட்ட 27 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் மூலம் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

**முக்கிய விவரங்கள்**

அமைப்பின் பெயர்: தேசிய சுகாதார இயக்கம் (TN NHM)
வேலை வகை: தமிழ்நாடு அரசு வேலை
பணியிடம்: சென்னை, தமிழ்நாடு
பணியின் தன்மை: தற்காலிக நியமனம்
மொத்த காலிப்பணியிடங்கள்: 27
பதவிகள்: Chief Advisor, Advisor, Consultant, Intern
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 23.06.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 23.07.2026

**கல்வித் தகுதி**

பின்வரும் தகுதிகளில் ஏதேனும் ஒன்றை பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்:

B.E / B.Tech
MCA
M.Tech
MPH
MHA
MSW
Health Informatics–ல் முதுநிலை பட்டம்
Public Health
Health Systems
Health Management
Community Medicine
Public Policy
Preventive & Social Medicine
Medical Electronics
Biomedical Instrumentation
Medical Technology
Social Sciences
Epidemiology

வயது வரம்பு
அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி.

சம்பளம்
பதவிக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். முழு விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பைப் பார்க்கவும்.

தேர்வு முறை
விண்ணப்பங்கள் பரிசீலனை
நேர்முகத் தேர்வு / ஆவணச் சரிபார்ப்பு (அறிவிப்பின்படி)

விண்ணப்பிக்கும் முறை
1. TN NHM அதிகாரப்பூர்வ https://nhm.tn.gov.in/ இணையதளத்திற்கு செல்லவும்.
2. வேலைவாய்ப்பு அறிவிப்பைப் பதிவிறக்கம் செய்து முழுமையாக படிக்கவும்.
3. ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தை நிரப்பவும்.
4. தேவையான ஆவணங்களை பதிவேற்றவும்.
5. விண்ணப்பத்தை சமர்ப்பித்து அதன் நகலை சேமித்து வைத்துக் கொள்ளவும்.

முக்கிய தேதிகள்
விண்ணப்பம் தொடக்கம்: 23.06.2026
கடைசி நாள்: 23.07.2026

**1. நிரந்தர வேலைவாய்ப்பா?**

இல்லை. இப்பணியிடங்கள் தற்காலிக அடிப்படையில் நிரப்பப்படுகின்றன.

**2. விண்ணப்பிக்க கடைசி தேதி?**

23.07.2026

**3. தேர்வு செய்யப்படுபவர்கள் எங்கு பணியமர்த்தப்படுவார்கள்?**

சென்னை, தமிழ்நாடு.

**4. தேர்வு முறை என்ன?**

அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி விண்ணப்பங்கள் பரிசீலனை, நேர்முகத் தேர்வு மற்றும் ஆவணச் சரிபார்ப்பு நடைபெறும்.

# தொடர்ந்து உயர்ந்து வரும் தங்கம் விலை!



சென்னை, ஜூன். 27–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.560 அதிகரித்து ரூ.1,06,960–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.70 அதிகரித்து ரூ.13,370–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.245–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.


இஸ்மாயில் லக்கி
டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# சென்னை மாநகராட்சியில் 35 டெண்டர்கள் ரத்து..! முதல்வர் விஜய் உத்தரவு..!!





சென்னை, ஜூன். 27–

சென்னை மாநகராட்சியில் ரூ. 284 கோடி மதிப்பிலான 35 நடைபாதை அமைக்கும் டெண்டர்கள் முதல்வர் ஜோசப் விஜய்யின் உத்தரவைத் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில ஒப்பந்ததா ரர்களுக்குச் சாதகமாக ஒப்பந்தங்களை முன்கூட்டியே தீர்மானித்தது, திட்டச் செலவு செயற்கையாக அதிகரித்தது போன்ற முறைகேடுகள் காரணமாக டெண்டர்களை ரத்து செய்ய நகராட்சி நிர்வாகத் துறையை வைத்திருக்கும் முதல்வர் விஜய் உத்தரவிட்டிருந்தார்.

கடந்த பிப்ரவரி 19 அன்று, சென்னை மாநகராட்சி பட்ஜெட் கூட்டத்தொடரில் நடைபாதைகள் அமைப்ப தற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொடர்ந்து , பிப். 20 ஆம் தேதியே ஒப்பந்தப்புள்ளி வெளியி டப்பட்டது.

அடையாறு சாஸ்திரி நகர், பெசன்ட் நகர் நான்காவது அவென்யூ, ஜவஹர்லால் நேரு மைதானம் அருகிலுள்ள ராஜா முத்தையா சாலை, கீழ்ப்பாக்கம் பார்னபி சாலை மற்றும் மயிலாப்பூர் டாக்டர் பி.எஸ். சிவசாமி சாலை உள்ளிட்ட முக்கிய சாலை களில் நடைபாதைகளை அமைக்க இத்திட்டம் 35 தொ குப்புகளாகப் பிரிக்கப்பட்டது.

இரண்டு முதல் மூன்று சாலைகளுக்கான நடைபா தைகள் அமைக்கும் ஒரு தொகுப்புக்கு ரூ. 8 கோடி முதல் ரூ. 9 கோடி வரை ஒப்பந்த மதிப்பு மதிப்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்த 35 பணிகளுக்கும் மிகக் குறைந்த விலை கோரிய ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்ட போதிலும், மார்ச் 15 அன்று தேர்தல் நடத்தை விதிமுறை கள் நடைமுறைக்கு வந்த தால், மாநகராட்சி தரப்பில் ஆணைகள் வழங்கப்பட வில்லை. இதனிடையே, இந்தப் பணிகளுக்காக பட்ஜெட் பல மடங்கு அதிகரித்துகாட்டப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதுதொடர்பாக ஆலோ சனை நடத்திய முதல்வர் விஜய், குறிப்பிட்ட 35 நடை பாதை அமைக்கும் டெண்டர்களையும் ரத்து செய்ய சென்னை மாநகராட்சி நிர்வாகத்துக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, 35 டெண்டர்களும் ரத்து செய்யப்படுவதாக சென்னை மாநகராட்சி நிர்வாகம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த திட்டத்துக்கு ஏற்கெனவே மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளதால், மறுமதிப்பீடு செய்யப்பட்டு மீண்டும் டெண்டர் விடப்படும் என்று சென்னை மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். இதுமட்டுமல்லாமல், சென்னை மாநகராட்சி தரப்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அனைத்து டெண்டர்களையும் மறுஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உத்தரவிட்டுள்ளது.

முதல்வர் ஜோசப் விஜய் தலைமையிலான தவெக அரசை சென்னை மாநக ராட்சி கூட்டத்தில் மேயர் ஆர். பிரியா விமர்சித்திருந்த நிலையில், டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சென்னை வள்ளுவர்கோட்டம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள பாக்யராஜ் உடலுக்கு முன்னாள் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார். பாக்யராஜ் உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின் பாக்யராஜ் மனைவி பூர்ணிமா, மகன், மகள் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். மு.க.ஸ்டாலின் உடன் டி.ஆர்.பாலு, ஆ.ராசா உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

# இயக்குனர் பாக்யராஜ் மறைவு - அரசியல் தலைவர்கள் இரங்கல்...!



சென்னை, ஜூன். 27–

பாக்யராஜ் மறைவுக்கு பல்வேறு அரசியல் தலைவர்கள் தங்களின் இரங்கலை தெரிவித்து வருகின்றனர்.

**எடப்பாடி பழனிசாமி**

தமிழ்த் திரையுலகின் சிறந்த இயக்குநரும் நடிகருமான கே. பாக்யராஜ் மாரடைப்பால் காலமானார். அவரது மறைவுக்கு அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி தன்னுடைய ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில், பிரபல திரைப்பட இயக்குநர், திரைக்கதை ஆசிரியர், நடிகர், இசையமைப்பாளர் என பன்முகத் திறமையாளராக விளங்கிய கே பாக்யராஜ் அவர்கள் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பதாருக்கும், திரைத் துறையினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த அவர்தம் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

**ஓ.பன்னீர்செல்வம்**

தமிழக முன்னாள் முதல்–அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள பதிவில், ”தமிழ்த் திரையுலகின் முன்னணி இயக்குநர், நடிகர், வசன கர்த்தா, தயாரிப்பாளர், இசையமைப்பாளர், பாடகர் எனப் பன்முகத் தன்மை கொண்ட அன்புச் சகோதரர் கே. பாக்யராஜ் மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியறிந்து ஆற்றொணாத் துயரமும் மிகுந்த மன வேதனையும் அடைந்தேன்.

பாக்யராஜ்யை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், திரைத் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்’’ என தெரிவித்தார்.

**கனிமொழி**

திமுக துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–

தமிழின் முன்னணி திரைக்கலைஞர் பாக்கியராஜ், மறைந்த செய்தி மிகுந்த வருத்தமளிக்கிறது. தனது ஜனரஞ்சகமான படைப்புகளால் தடம் பதித்து, ஐம்பதாண்டுகளாக தமிழ்த் திரைதுறைக்கு பல முக்கிய பங்களிப்புகளை அளித்தவர். தனது திரைக்கதைகளில் மனித மனங்களின் உளவியலை பிரதானமாக வைத்து தமிழில் பல முக்கிய மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்ற படைப்புகளைத் தந்த அவர், ‘திரைக்கதை மன்னன்’ என்று புகழப்பட்டவர். அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் திரைத்துறையினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரேமலதா**

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள பதிவில், ’’பன்முகத் திறமைகளால் தமிழ் திரையுலகில் தனித்துவமான முத்திரை பதித்த திரைப்பட இயக்குநர், திரைக்கதை ஆசிரியர், நடிகர் மற்றும் தயாரிப்பாளரான கே. பாக்யராஜ் காலமானார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியையும் ஆழ்ந்த வேதனையையும் அளிக்கிறது.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலக நண்பர்களுக்கும், ரசிகர்களுக்கும், அவரது நெருங்கிய உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சசிகலா**

அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் சசிகலா வெளியிட்டுள்ள பதிவில் , ’’பிரபல நடிகரும், திரைப்பட இயக்குனருமான அன்பு சகோதரர் பாக்யராஜ் மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

பல்துறை வித்தகரான பாக்யராஜ் அரை நூற்றாண்டாக தமிழ் சினிமா உலகில் மிகவும் சிறப்பாக பணியாற்றியவர். வாழ்நாள் சாதனையாளர் விருது, பிலிம்பேர் விருதுகளை பெற்று இருக்கிறார். திரைப்படத்துறையில் பன்முகத்தன்மை கொண்ட திரு.பாக்யராஜ் அவர்களின் மறைவு தமிழ் திரையுலகிற்கு யாராலும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அன்பு சகோதரர் பாக்யராஜ்யை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், திரை உலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகிறேன்’’ என தெரிவித்தார்.

**அன்புமணி ராமதாஸ்**

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள பதிவில், ’’தமிழ்த் திரையுலகின் தளகர்த்தர்களில் ஒருவரும், சிறந்த திரைக்கதையாசிரியர் என போற்றப்பட்டவருமான இயக்குனர் கே.பாக்யராஜ் காலமானார் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

# அதிக சிறப்பு ரெயில்களை இயக்கி தெற்கு ரெயில்வே சாதனை: 32.98 லட்சம் பேர் பயணம்...!



சென்னை, ஜூன். 27–

கடந்த (2025–26) நிதியாண்டில் அதிக எண்ணிக்கையில் சிறப்பு ரெயில்களை இயக்கி தெற்கு ரெயில்வே சாதனை படைத்துள்ளது. மொத்தம் 229 சிறப்பு ரெயில்கள் 2,513 முறை இயக்கப்பட்டுள்ளன. இதுதவிர, முன்பதிவில்லாத சிறப்பு ரெயில்கள் 1,762 முறை இயக்கப்பட்டுள்ளன.

சிறப்பு ரெயில்களில் மொத்தம் 32 லட்சத்து 98 ஆயிரம் பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

இதன் மூலம் தெற்கு ரெயில்வேக்கு ரூ.243 கோடியே 22 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது. சராசரியாக ஒரு சிறப்பு ரெயிலில் 1,312 பேர் பயணம் செய்துள்ளனர். இது அகில இந்திய சராசரியான 894 என்பதைவிட மிகவும் அதிகமாகும். இதன் மூலம் இந்திய அளவில் முதன்மை மண்டலமாக தெற்கு ரெயில்வே உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

# திருப்பதி கோவிலில் ஒரே நாளில் 81 ஆயிரம் பக்தர்கள் சாமி தரிசனம்!

திருப்பதி, ஜூன். 27–

திருமலையில் மொத்தம் 81 ஆயிரத்து 340 பக்தர்கள் ஏழுமலையானை தரிசனம் செய்தனர். பக்தர்கள் செலுத்திய உண்டியல் காணிக்கை ரூ.3.76 கோடியாக பதிவாகியுள்ளது. மேலும், 44 ஆயிரத்து 874 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தியுள்ளனர். லட்டு விற்பனை 4.42 லட்சமாகவும், அன்னபிரசாதம் பெற்ற பக்தர்கள் எண்ணிக்கை 3.31 லட்சமாகவும் பதிவாகியுள்ளது. மருத்துவ சேவைகளை 3,916 பக்தர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

பக்தர்கள் கூட்டநிலை காரணமாக, சிலாதோரணம் வரை வெளிப்புற வரிசையில் பக்தர்கள் காத்திருக்கின்றனர். எஸ்.எஸ்.டி.டோக்கன் இல்லாத சர்வதரிசனத்திற்கு சுமார் 24 மணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

## சினிமா துளிகள்..!

# இயக்குனர் பாக்யராஜ் காலமானார்!



பிரபல நடிகரும் இயக்குநருமான பாக்யராஜ் காலமானார். 73 வயதான பாக்யராஜ் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவரது உயிர் பிரிந்தது.

கே. பாக்யராஜ் 1953 ஜனவரி 7–ந்தேதி ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் அருகே உள்ள வெள்ளங்கோவில் பகுதியில் பிறந்தார். இவரின் முழுப் பெயர் கிருஷ்ணசாமி பாக்யராஜ்.

ஆரம்பத்தில் புகழ்பெற்ற இயக்குநர் பாரதிராஜா அவர்களிடம் உதவி இயக்குநராக பணியாற்றினார்.

பின்னர் 1979–ம் ஆண்டு சுவரில்லாத சித்திரங்கள் திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார்.

அதன் பிறகு இயக்குநராகவும், நடிகராகவும், கதை, திரைக்கதை, வசன ஆசிரியராகவும் பெரும் வெற்றி பெற்றார். நகைச்சுவை, குடும்ப உணர்வு, சமூகக் கருத்துகள் ஆகியவற்றை அழகாக இணைத்து திரைப்படங்களை உருவாக்கியவர். இவரது திரைக்கதைகளில் எதிர்பாராத திருப்பங்களும் இயல்பான உரையாடல்களும் முக்கிய அம்சங்களாகும்.

பல பிலிம்பேர் விருதுகள் மற்றும் தமிழ்நாடு மாநில திரைப்பட விருதுகள் பெற்றுள்ளார். சிறந்த திரைக்கதை ஆசிரியராகவும், வசனகர்த்தாவாகவும் பாராட்டப்பட்டுள்ளார்.

இயக்குநர் கே. பாக்யராஜ் தமிழ் சினிமாவில் தனித்துவமான திரைக்கதை, இயல்பான நகைச்சுவை, குடும்பக் கதைகள் மற்றும் வலுவான கதாபாத்திரங்களால் இன்று வரை ரசிகர்களால் மதிக்கப்படும் முக்கியமான திரைப்பட ஆளுமையாகத் திகழ்கிறார்.

# பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கிடையேயான திருக்குறள் பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகள்!

திருச்சி, ஜூன். 27–

2026 இந்தியாவில் நிதி வர்த்தகத்தில் முன்னணி இடத்தை வகித்து வரும் ஸ்ரீராம்குழுமநிறுவனங்களின் ஒரு அங்கமாகிய ஸ்ரீராம் இலக்கியக் கழகம், வரும் ஜூலை 18 முதல் ஆகஸ்ட் 30 வரை தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவ / மாணவியரிடையே திருக்குறள் பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்த இருக்கிறது. நடைபெறும் இடங்கள்: இப்போட்டிகள், 12 மையங்களில் நடத்தப்படும். திருவாரூரில், ஜூலை 25 அன்று # 37, புதுத் தெருவில் உள்ள நியூ பாரத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், தஞ்சாவூரில், ஆகஸ்ட் 8 அன்று திருச்சி சாலையிலுள்ள பாரத் அறிவியல் மற்றும் மேலாண்மை கல்லூரியிலும், திருச்சியில், ஆகஸ்ட் 9 அன்று மேலசிந்தாமணியில் உள்ள இ.ஆர். மேல்நிலைப் பள்ளியிலும் நடைபெறுகிறது. திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர் தவிர, ஜூலை 18 சேலத்திலும், ஜூலை 19 வேலூரிலும், ஜூலை 26 புதுச்சேரியிலும், ஆகஸ்ட் 1 ஈரோட்டிலும், ஆகஸ்ட் 2 கோவையிலும், ஆகஸ்ட் 22 மதுரையிலும், ஆகஸ்ட் 23 நெல்லையிலும், ஆகஸ்ட் 29 சென்னையிலும், ஆகஸ்ட் 30 தாம்பரத்திலும், நடைபெறவுள்ளது. இடைநிலை (6 – 8 ஆம் வகுப்புகள்), மேல்நிலை (9 – 12 ஆம் வகுப்புகள்), கல்லூரி என மூன்று பிரிவுகளாக இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் பங்கு பெற விரும்புவோர் இதற்கான விண்ணப்பப் படிவத்தினை அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது www.shriramchits.com என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மாணவ சமுதாயத்தினரிடையே திருக்குறளின் கருத்துகளைப் பரப்பவும், தமிழாற்றலை வளர்க்கவும், வரையும் திறனை ஊக்குவிக்கவும் கடந்த 1988–ஆம் ஆண்டு முதல் ஸ்ரீராம் இலக்கியக் கழகம் இப்போட்டியினை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020